Registered No. M-4483 Madras War Review (TAMIL) 12-5-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் வரு மேமீ 12உ, வெள்ளிக்கிழமை இதழ் 36

இந்தியா மீது படையெடுப்பு ஆபத்தில்லை

"நான் கொஹிமா, இம்பால், அரக்கான் முதலிய பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். ஜப்பானியர் அடியோடு தோற்கடிக்கப் படுவார்கள் என்ற உறுதியுடன் நான் திரும்பி யிருக்கிறேன். உண்மையில் இந்தியா மீது படையெடுப்பு ஆபத்து இல்லை, என் மனதில் ஐந்து விஷயங்கள் பதிந்துள்ளன.

முதலாவதாகவும், முக்கியமாகவும் எனக்குப் பட்ட விஷயம், நமது துருப்புகள் தன் நம்பிக்கையுடனும், வீரத்துடனும், உறுதியுடனும் எதிரியுடன் போராடத் தயாரா யிருத்தலே யாகும்.

இரண்டாவது, நமது படைகளுக்கு வேண்டிய தளவாடங்களும், இதர சாதனங்களும் எதேஷ்டமாக எங்கும் கிடைக்கின்றன.

மூன்றுவது, நமது ஆகாய விமான பலம் உச்ச நிலையில் இருக்கின்றது. எதிரி நமக்குச் சில்லரைத் தொந்தரவு தான் கொடுக்க முடியும்.

நான்காவதாக, ஜப்பானியர் வளைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மாரி காலத்துக்கு முன் வாபசாகவேண்டும். அல்லது மடிந்து மாயவேண்டும்.

கடைசியாக, போர் முனையிலிருக்கும் நம் படையினருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை.

என் மனதிற் பட்ட முக்கிய விஷயம் நமது இந்திய துருப்புகளின் ஊக்கமும் உற்சாகமுமே. அவர்கள் "ஜப்பானியரை அடியோடு முறியடிக்காமல் வீடு திரும்பமாட்டோம்" என்று பல தடவைகள் என்னிடம் உறுதியுடன் கூறினார்கள்.

உண்மை என்ன வென்றால், நமது துருப்புகள் இம்பால் சமவெளியில் சௌகர்யமாகவும், ஸ்திரமாகவும் அமர்ந்திருக்கின்றன. காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கும் ஜப்பானியர் எப்பொழுது வெளி வருவார்களோ அப்பொழுது அவர்கள் மீது பாய்ந்து போராட வேண்டுமென்று அதிக ஆவலுடன் நம் படையினர் காத்துக் கொண்டிருக்கின்றனர்."

—சர் சுல்தான் ஆமது, இந்திய அரசாங்க நிர்வாக சபை அங்கத்தினர், டில்லியில் செவ்வாய்க்கிழமை கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
இந்தியா மீது படையெடுப்பு ஆபத்தில்லை ..	1	பெண்கள் ஏ. ஆர். பி. படை	5
முரசொலி	2	ஜப்பானின் பகட்டுப் பேச்சு	6
தலையங்கம்: ஏகாதிபத்திய பிரதமர்கள் மகா நாடு	3	மந்தம் தீர்ந்தது	7
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	நாமும் யுத்தமும்	10
		யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

நேச தேசத்தினர் முயற்சி தொடர்ந்து நடக்க வேண்டும்

"ஹிட்லரை முதலில் முறியடிக்க வேண்டும்" என்னும் கொள்கையை ஆஸ்திரேலியா ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால் பஸிபிக்கில் ஜப்பானைத் தோற்கடிக்கும் விஷயத்திலும் நேச தேசத்தினர் போதிய முயற்சியை தொடர்ந்து சேர்ந்தாற்போல் நடத்த வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. இல்லாவிட்டால் பஸிபிக் போர் முனையில் ஓர்வித மந்தம் ஏற்பட்டு போரின் கால அளவும் வெகு அதிகமாகி விடும். இதைப் பிரதம மந்திரிகளின் மகாநாடு பூர்ணமாக ஒத்துக் கொண்டது.

பஸிபிக்கில், பிரிட்டிஷ் ஸ்தாபனங்களை நிர்மாணித்து விரிவுப் படுத்துவதற்கு ஆஸ்திரேலியாவுக்குள்ள சக்தியுடன் தங்கள் க்ஷேமமும் சம்பந்தப்பட்டிருக்கிற தென்பதை பிரிட்டிஷ் குடியரசைச் சேர்ந்த இதர அங்கத்தினர்கள் யாவரும் உணர வேண்டும். ஏகாதிபத்தியத்தில் ஆஸ்திரேலியாவுக்குள்ள முக்கிய ஸ்தானத்தை இதரர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

—ஆஸ்ரேலிய பிரதம மந்திரி, மிஸ்டர் ஜான் கர்ட்டின்,
திங்கட்கிழமை லண்டனில் ஒலிபரப்பிய பிரசங்கம்.

எச். பி. பி.

தற்போதைய தேவைக்கு மிஞ்சி வைத்திருத்தல்.

ஒருவர் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் மூன்று மாத தேவைகளுக்கு அவசியமான அளவிற்காவது, ஒருவருடைய குறிப்பிட்ட நிலைமையையும் விசேஷக் காரணங்களையும் முன்னிட்டு, நியாயமான முறையில் அதிகக் காலத் தேவைகளுக்கு அவசியமான அளவிற்காவது, சிவில் சப்ளை கண்ட்ரோலர் ஜெனரல் அறிவித்துள்ள பொருள்களின் ஏதாவ தொன்றின் அளவு, எந்த ஒரு சமயத்திலாவது அவரிடம் அதிகமாயிருக்கு மானால், 1943-ம் வருஷத்திய அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசர சட்டத்தின் 7-வது விதிப்படி குற்றஞ் செய்தவராகிறார்.

"நீங்கள் அக்கிரமமாகச் சேமிக்காவிட்டால் மற்றவர்களுக்கு அதிகமாக கிடைக்கும்."

விற்க வியாபாரி மறுத்தால்.

தனிப்பட கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் உணவுப் பொருட்களையும் மற்றப் பொருட்களையும் தவிர, மற்றப் பொருட்களை விற்க வியாபாரி மறுத்தால், 1943-ம் வருஷத்திய அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலையையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின் 9-வது விதிப்படி குற்றஞ் செய்தவராகிறார்.

அப்படிப்பட்ட குற்றங்களைக் குறித்து வெளியூர்களில் வியாபார வரி உத்தியோகஸ்தருக்கும் சென்னையில் சிவில் சப்ளை கமிஷனருக்கும் அறிவிக்க வேண்டும். **ஞாபகமிருக்கட்டும்: பொருள்களை வாங்கும் ஒவ்வொருவரும் ஒரு இன்ஸ்பெக்டரைப் போல் வேலை செய்தால் மட்டுந் தான் இந்த அவசரச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும்.**

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV   1944-ம்ஹூ மேமீ 12உ, வெள்ளிக்கிழமை   இதழ் 36

ஏகாதிபத்திய பிரதமர்கள் மஹாநாடு

மேமீ 1உ பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிரதமர்கள் மஹாநாடு லண்டனில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலின் தலைமையில் கூடியதைப் பற்றி ஏற்கெனவே சென்ற இதழின் தலை யங்கத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம். இதன் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் இதன் ஆரம்பம், வளர்ச்சி முதலியவைப்பற்றிச் சற்று கவனிப்போம்.

இந்த ஏகாதிபத்திய மஹாநாடு சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப் பட்ட தொரு ஸ்தாபனம் அல்ல. பார்லிமெண்டு இதைப்பற்றி ஒரு சட்ட மியற்ற வில்லை. குடியேற்ற நாட்டு அரசியல் அமைப்புகளிலும் இது பற்றி திட்டமான ஷரத்துகள் எதுவும் கிடையாது. 1887-ம் வருஷம் விக்டோரியா மஹாராணியார் தனது பொன் விழாக் கொண்டாட்டத்திற்கு, சுய ஆட்சி பெற்றுள்ள குடியேற்ற நாடுகளின் பிரதம மந்திரிகளை வரும்படி அழைப்பு அனுப்பி இருந்தார். இவ்வாறு பல குடியேற்று நாட்டு மாந்திரிகளும் கூடும் சந்தர்ப்பத்தை ஏகாதிபத்தியத்தின் பொதுப் படையான விஷயங்களைப் பற்றிக் கூடிக் கலந்து பேச உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் அச்சமயம் குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்த மிஸ்டர் ஸ்டான்ஹோப்புக்குத் தோன்றியது. அவர் தான் முதன் முதலாக இந்த மஹாநாட்டுக்கு விதை விதைத்து அடி கோலியவராகும். இப்படி ஆரம்பமாகும் இந்த சிறு காரியம் எவ்வளவு மஹத்தானதாக வரப்போகின்றது, ஏகாதிபத்தியத்தின் பிற்கால வளர்ச்சியிலும், வாழ்விலும் இம்மஹாநாடு எவ்வளவு முக்கிய ஸ்தானம் பெறப்போகின்றது என்பதையும் தான் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையின் முக்கியத்தையும் மிஸ்டர் ஸ்டான்ஹோப் உணர்ந்தே இருந்தார். அவர், குடியேற்ற நாடுகளின் பிரதம மந்திரிகளுக்கு அனுப்பின அழைப்பு கடிதத்தில் "இதன் ஆரம்பம் எளியதாக இருக்கலாம், ஆனால் ஏகாதிபத்தியத்தின் பிற்கால வாழ்வையும், நாகரீக உலகின் போக்கையும் பின்னால் இதனால் ஏற்படும் பலன்கள் எவ்வளவுதூரம் பாதிக்கும் என்பதை இப்பொழுது யூஹித்து உணர்ந்து கொள்ள முடியாது" என்று கூறி யிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஏகாதிபத்திய மஹாநாட்டின் முதல் கூட்டம் 1887-ம் வருஷம் நடை பெற்றது. பொதுவான விஷயங்களைப் பற்றி ஆலோசித்தனர். ஆனால் அதில் பிரதம மந்திரி கலந்துகொள்ள வேண்டு மென்றோ அல்லது தலைமை வகிக்க வேண்டு மென்றோ அப்பொழுது கருதப்படவில்லை. குடியேற்ற நாட்டு மந்திரிக்கே அது பற்றிய விஷயங்கள் பூராவும் விடப்பட்டிருந்தது.

பின்னர் இருபது வருஷங்களுக்குப்பின் 1907-ம் ஆண்டு ஒரு கூட்டம் நடைபெற்றது. அடிக்கடி கூட வேண்டு மென்று இம்மஹா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. 1926-ம் வருஷம் கூடிய ஏகாதிபத்திய மஹாநாடு ஒரு முக்கியமான கூட்டமாகும். இந்த ஸ்தாபனம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மையை மட்டும் பிரதானமாகக் கொண்டதல்ல. பிரிட்டிஷ் குடியரசு நாடுகள் உலக க்ஷேமாபிவிர்த்தியில் தங்கள் கடமையை எப்படி ஒற்றுமையுடன் ஒழுங்காக நிறைவேற்றலாம் என்பதே மஹாநாட்டின் நோக்கம். இந்த மகா நாட்டில் தலைமை வகித்துப் பேசிய மிஸ்டர் சர்ச்சில் தற்சமயம் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி நாஸிஸத்தையும், பாஸிஸத்தையும், ஜப்பானியப் பேராசைப் பித்தத்தையும் அடக்கி ஒடுக்குவதில் சாம்ராஜ்ய நாடுகள் எப்படி ஒத்துழைக்க வேண்டு மென்பதை விளக்கிக் கூறினர். கூட்டத்துக்கு கானடா பிரதம மந்திரி மக்கன்ஸி கிங், ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் ஜான் கர்ட்டின், தென் ஆப்ரிக்க பிரதம மந்திரி மார்ஷல் ஸ்மட்ஸ், நியூஸிலந்து பிரதம மந்திரி மிஸ்டர் ப்ரேஸர் விஜயம் செய்திருந்தனர். இந்தியாவின் சார்பாக இந்தியா மந்திரி மிஸ்டர் எல். எஸ். ஏமரியும், யுத்த மந்திரி சபையின் இந்தியப் பிரதிநிதிகளாகிய ஸர் பிரோஸ் கான் நூனும், காஷ்மீர் மஹாராஜாவும் மஹாநாட்டில் கலந்து கொண்டனர். முதல் நாள் பிரதம மந்திரி சர்ச்சில் பேசியபின் பேசிய மற்ற தேசப் பிரதிநிதிகளின் பேச்சுக்களில் ஒற்றுமை மனப்பான்மை பரவி இருந்தது. சிற் சில சிறு விஷயங்களில் அபிப்பிராய பேதங்களிருந்தபோதிலும், முக்கியமான விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் கிடையாது. பிரதம மந்திரியும், மிஸ்டர் ஈடனும் ஏகாதிபத்தியப் பிரதமர்களுக்கு, ஐரோப்பிய படையெடுப்புக்கான ஏற்பாடுகளை பற்றி பிரஸ்தாபித்தார்கள். மேலும் பஸிபிக்கிலும், தூரக் கிழக்குத் திசையிலும் ஜப்பானை அடக்குவதற்கான விஷயங்களும் ஆலோசிக்கப்பட்டன. ஹிட்லரிடமிருந்து விடுவிக்கப்படும் நாடுகளின் நிர்வாகம், பிரஞ்சு நிர்வாகம், ஜெர்மனி சரணகதி யடையும் போது பிரயோகப்படவேண்டிய நிபந்தனைகள், மேற் கொண்டு யுத்த முயற்சியில் அந்தந்த நாடுகள் செய்ய வேண்டிய வேலைகள், யுத்தத்துக்குப் பின் ஆகவேண்டிய புனருத்தாரணத் திட்டங்கள் இவைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. ஒருமைப்பட்ட முடிவுகளுக்கும் மஹாநாடு வந்துளது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலகில் ஆக்ரமிப்பை அழித்து, சமாதானத்தையும், சுதந்திரத்தையும் நிலை நாட்ட பலர் தாமாகவே ஒன்றுபட்டு வேலை செய்யும் ஒரு ஸ்தாபனம்

என்பதை நிரூபிக்கும். இந்தியாவின் சார்பாகப் பேசிய சர் பிரோஸ்கான் நூன் இந்திய மக்கள் யாவரும் ஏக மனதாக அச்சு நாட்டினரை நசுக்க முன் வந்துள்ளார்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் எடுத்துக் காட்டினார். அதை ஆமோதித்தே காஷ்மீர் மஹாராஜாவும் பேசினார். இந்தியாவின் அந்தஸ்து எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பது இந்தியப் பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் எவ்வளவு விசேஷமாகக் கலந்து கொள்கிறார்களென்பதினின்றும் நன்கு விளங்குகிறது. எல்லா முக்கியமான விஷயங்களிலும் அவர்களின் ஆலோசனை எடுத்துக் கொள்ளப்படுகிறது. மிக்க நெருக்கடியான சமயத்தில் கூடியிருக்கும் இம் மகாநாடு வெற்றிக்கு வழி தேடும் என்பதில் சந்தேகமில்லை. ஏகாதிபத்தியம் உலக சமாதானத்துக்கு ஒரு அரணாக விளங்குகின்றது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

மணிப்பூர் மலை முனை: கொஹிமா, இம்பால் பிரதேசப் போர் ஆராய்ச்சி.

அட்மிரல் மவுண்ட் பேட்டனின் தலைமைக் காரியாலயத்திலிருந்து செவ்வாய்க் கிழமை (மே 9உ) வெளியிட்ட அறிக்கையில், மணிப்பூர் மலை முனையில் ஜப்பானியர்கள் புதிய வேகத்துடன் எல்லாப் பகுதிகளிலும் தாக்க ஆரம்பி திருக்கின்றனர் என்று கூறப்பட்டிருக்கின்றது. தங்களால் சமீபத்தில் இழக்கப்பட்ட முன்னணி ஸ்தலங்களை திரும்பவும் கைப்பற்ற ஜப்பானியர்கள் தீவிர எதிர் தாக்குதல்கள் செய்ய முற்பட்டிருக்கின்றனர். கொஹிமாவில் கடுமையான போர் நடந்து வருகிறது. கொஹிமா நகருக்கு வடக்கிலும், தெற்கிலுமுள்ள சில ஸ்தலங்களை நேசப் படையினர் பிடித்துவிட்டனர். இப்பிரதேசத்தில் நமது படைகளின் முன்னேற்றத்தை ஒரு போர்க்கள பத்திரிகை நிருபரின் அறிக்கை விளக்குகிறது. இந்தப் போராட்டத்துக்கு முன் கொஹிமாவின் முக்கால் பகுதி ஜப்பானியர் வசம் இருந்தது. இன்னொரு பாதிக்கு மேலேயே நேசப் படைகளிட மிருக்கிறது. இம்பால் பகுதியில், தனிப்பட்ட சிறு சண்டைகளே நடந்தன இப்பொழுதோ, நமது ரோந்து படைகள், இம்பாலுக்கு வடக்கே, கொஹிமா ரஸ்தாவில் 28 மைல்கள் ஊடுருவிப் பாய்ந்திருக்கின்றன. தற்போதுள்ள நிலை என்ன? இவ்விரு பகுதிகளிலும் எதிரி மடக்கப்பட்டு மேற்கொண்ட போரின் போக்கை நிர்ணயிக்கும் சக்தி நமது படையினரிடமே இருக்கிறது.

சென்ற இரண்டு வாரங்களில் ஏற்பட்ட நடவடிக்கைகளின் போக்கைக் கவனித்தால், ஜப்பானியர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களையும், மேற்கொண்டு உதவிகளையும் நாகமலைச் சாரலிலிருந்து கொண்டுவரக் கூடிய சக்தியை நாம் குறைவாக மதிப்பிட்டு விட்டோம் என்று தோன்றுகிறது. 14-ம் படையின் சப்ளைக்கு முக்கியமாக உபயோகப்பட்டு வந்த ரஸ்தாவை எதிரிகள் துண்டிக்க நேர்ந்தமைக்கு இதுவே காரணம். இந்த ரஸ்தா டிடிமிலிருந்து இம்பாலுக்கும், அங்கிருந்து கொஹிமாவுக்கும் போய் பின்னர் அஸாம்-வங்காள ரயில்வேயிலுள்ள திமாப்பூருக்குச் செல்லுகிறது.

ஜப்பானியர் இந்த ரஸ்தாவை முப்புறங்களிலிருந்தும் தாக்கியதின் நோக்கம், இந்த ரஸ்தாவைத் துண்டித்து, பல தனிப்பட்ட பகுதிகளாக்கி, இந்தப் போர்முனை பூராவையுமே சிதற அடித்து விடவேண்டுமென்பதே. ஒரு சமயம் நிலைமை மிகவும் மோசமானதாயிருந்தது. டிடிமுக்கு வடக்கே இருந்த 17-வது இந்தியப் படைப் பகுதியை எதிரிகள் சூழ்ந்துகொண்டனர். டிடிம்-இம்பால் ரஸ்தாவை இம்பாலுக்கு 25 மைல் வரை தன் ஆதிக்கத்துக்குட்படுத்திக் கொண்டனர். இந்தச் சமயத்தில் தான் டோக்கியோ ரேடியோ 17-வது இந்திய டிவிஷனை அடியோடு "நாசம் செய்வதைப்" பற்றி ஜம்பமாகப் பேசியது. ஆனால் நமது படைகள் எதிரி வளைத்துக் கொண்டிருந்ததை உடைத்து ஊடுருவிப் பாய்ந்து வெளிவந்து, இம்பால் சமவெளிக்கு யாதொரு சேதமுமின்றி வந்து சேர்ந்தன. எதிரியின் மூன்றாவது நடவடிக்கை நமது பாதுகாப்பு அரண்களை டாமு-இம்பால் ரஸ்தாவில், இம்பாலுக்கு 45 மைலில் உள்ள இடத்துக்குத் தள்ளியது. மேலும் வடக்கில், எதிரிகள், இம்பாலுக்கும் கொஹிமாவுக்கும் மத்தியிலும், கொஹிமாவுக்கும் திமாப்பூருக்கும் இடையிலும் ரஸ்தாவில் தடைகளை ஏற்படுத்தினார்கள். பிறகு நிலைமை மாறிற்று. கொஹிமாவின் பாரம் நீக்கப்பட்டது. கொஹிமாப் படைக்கு உதவி கிட்டியது. மணிப்பூர் ரஸ்தாவினின்றும் எதிரிகளை வெளியேற்ற இம்பாலிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இம்பால் சமவெளி 30 மைல் அகலமும், 45 மைல் நீளமும் கொண்டது. இதை மிகுந்த பலங்கொண்ட படைகள் காத்துவருகின்றன. கொஹிமாவில் வெற்றியடைய முடியாத ஜப்பானியர் இம்பாலில் வெற்றியடைவது துர்லபமே.

வட பர்மாப் போர் முனை: ஸ்டில்வெலின் முன்னேற்றம்.

வட பர்மாப் போர் முனைப் பிரதேசத்தில் கால மாறுதலினால் நேசதேச நடவடிக்கைகள் ஓரளவு கட்டுப்பட்டிருந்தபோதிலும், ஜெனரல் ஸ்டில்வெலின் சீனப் படையினரும், அமெரிக்கத் துருப்புகளும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டில்வெலின் படையில், அமெரிக்கர்களால் பயிற்றுவிக்கப்பட்ட இரு சீன பட்டாளங்களும், ஒரு அமெரிக்கப் பகுதியும், பல சீன கொரில்லாக் கூட்டங்களும் இருக்கின்றன. புதிய பர்மா ரஸ்தாவுக்கு தேசத்தின் அந்தப் பிரதேசத்தைப் பண்படுத்தி வைப்பதே அவர்களின் முக்கிய வேலை. அவர்கள் லெடோவிலிருந்து பாங்கா கணவாய் மூலம் தென் கிழக்கில் ஹுக்காங் பள்ளத் தாக்கைத் தாண்டி மித்சியினா, மோகாங்கை நோக்கி முன்னேறினார்கள். அவர்கள் முன்னேறிக் கொண்டே ஒரு கெட்டியான ரஸ்தாவையும் போட்டுக் கொண்டு சென்றனர். இந்த ரஸ்தா மித்கியினாவுடன் நின்றுவிடாது. மேலும் தெற்கே பாமோ வரையில் செல்லும். யுனான் மாகாணத்தைச் சேர்ந்த வான்டிங் நகரத்தில் பழைய பர்மா ரஸ்தாவுடன் இணைப்பதற்கு பாமோவிலிருந்து ஏற்கனவே ஒரு ரஸ்தா இருக்கிறது.

ஆனால் இது பூர்த்தியாவதற்குள், ஐரோப்பிய யுத்தம் உச்ச நிலையடைந்து, முடிவடைந்துவிடலாம். எனவே ஜெனரல் ஸ்டில்வெலின் வேலை என்ன? மித்கியினாவை அடைந்து தனது ஸ்தானத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளுவதே.

பிடிபட்ட ஜப்பானியக் கைதி ஆவலுடன் தேநீர் அருந்துகிறான்.

பெண்கள் ஏ. ஆர். பி. படை

(ஸ்ரீமதி பி. பாரிஜாதம் நாயுடு, எம்.ஏ., எல்.டி.)



சமீபத்தில் சென்னை ஐலந்து க்ரௌண்ட் மைதானத்தில் நடைபெற்ற பெண்கள் ஏ.ஆர்.பி. அணி வகுப்பை லேடி ஹோப், கமாண்டண்ட் பி. பாரிஜாதம் நாயுடு முதலியோர் பார்வையிடும் காட்சி.

நம் தேசத்துச் சாதாரணக் கொள்கை யாவது, பெண் வீட்டில் தங்கிக் குடும்பத்தை நடத்த, ஆண் வெளிச் சென்று, அக் குடும்பத்திற்கு வேண்டிப் பணம் சம்பாதித்து வரவேண்டும் என்பது.

கொஞ்சகாலமாக, அக்கொள்கை சற்று மாறி, பெண்களும் கல்வி கற்று, பல உத்தியோகத் துறைகளில் புகுந்து ஆண்களைப் போலவே தம் தாயார் சகோதரிகள் ஆகியோர் குடும்பத்தை நடத்துகின்றனர். இத்தொகை 1,000-க்கு 5 வீதம் என்றாலும் பொருந்தும். இப்படிப் பொதுவாக சமூகத் தொண்டு செய்ய, முன் வந்தவர்களை, சமூகம் கௌரவிக்கின்றதா என்பது சந்தேகமே. இது இப்படி இருக்க, இந் நிலையில் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. வருடம் ஐந்து ஆகியும் அது முடியும் பாட்டைக் காணோம். இந்த 2-வது யுத்தத்தின் பயனாக எங்கு பார்த்தாலும் கஷ்டம். எது செய்வதென்றாலும் திடமில்லாத நிலைமை. நாளை எப்படியோ, எந்த விதமோ, எது புதிதாகக் கிளம்புமோ என்னும் ஒரு சிந்தனை இப்படி. ஒரு ஜாதி, ஒரு மதத்தார், ஏழை, பணக்காரர், பெரியார், சிறியார், என்னும் வித்தியாசமில்லாமல் கஷ்டத்தை, எந்த விதமாகக் குறைக்கலாம் என்பது ஒருவருடைய கடமை மட்டும் அல்ல. நம் தேசத்து எல்லோருடைய கடமையும், முக்கியமாகப் பெண்களது கடமையுமேயாகும்.

மஹானின் நம்பிக்கை

நம் நாட்டில் இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய அபாயமான சந்தர்ப்பத்தில்கூட பெண்கள் குடும்ப வாழ்க்கையை விட வேறு ஒரு விதத் தொண்டும் செய்ய முடியாது என்பது விசனிக்கத் தக்க ஒரு கொள்கை. நம் நாட்டு மகான் ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் மேல் நாட்டில் பெண்கள் தாமாகத் தம் காரியங்களைச் செய்து கொள்ளக்கூடும் என்னும் ஒரு நம்பிக்கை யுண்டு ; அந்த வித நம்பிக்கையுடன், நாமும் நம் நாட்டுப் பெண்களை நடத்தினால், அவர்கள் ஒவ்வொரு சிறிய காரியத்திற்கும், ஆண்களை எதிர் பாராமல், அவர்கள் காரியங்களைப் பதின் மடங்கு நன்றாக செய்து கொள்வார்கள் என்று சொன்னார். மேலும் அவர்கள் சமூகத் தொண்டு செய்ய ஊக்கத்துடன் முன் வருவார்கள்.

இதை உணர்ந்த பெரிய அறிவாளிகளும், முக்கியமாக சென்னை அரசாங்கத்தாரும் இந்த இரண்டாம் யுத்தத்தின் பயனாக பெண்கள் ஏ.ஆர்.பி. படையை ஆரம்பித்தனர்.

யுத்த ஆரம்பத்தில் ஆண்கள் ஏ.ஆர். பி. மட்டும்தான் இருந்தது. அதிலுள்ள ஆண் அங்கத்தினர்களே விமானப் படையெழுச்சி சமயத்தில், பாதுகாத்துக் கொள்ளும்விதத்தை பற்றிப் பெண்களுக்கும் சொல்லி வந்தனர். ஆனால் எல்லாத் துறைகளிலும் பிற்பாடு உணர்ந்தது போல், இத் துறையிலும் பெண்கள்தான் விஷயங்களை எடுத்துச் சொல்வதில் சிறந்தவர்கள் என்று உணர்ந்து பெண்கள் ஏ.ஆர்.பி. படையை ஆரம்பித்தனர். இதன் அங்கத்தினர்கள் தற்காப்பு விஷயங்களே யல்லாமல், குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய மற்றெல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லுகின்றனர். ஏனென்றால் சமூக வாழ்க்கையில் பெண்கள், சந்தோஷமாயும், கல்வி கற்றவர்களாயும், பல தொழில்களை கைக்கொண்டு, தொண்டு செய்பவர்களாயும், இருக்க வேண்டும் என்பது இச்சங்கத்தின் நோக்கம்.

இவர்கள் நீத வாக்கியமே, "ஊக்கத்துடன் உழையுங்கள்" என்பதுதான்.

இரண்டாம் யுத்தத்தின் பலனாக ஆரம்பித்த இந்தப் படையை, யுத்தத்திற்குப் பிறகும் பெண்கள் அபிவிர்த்திக்காக நிலைநாட்ட, சென்னை அரசாங்கத்தார் உத்தேசித்துள்ளார்கள். இதற்கு வேண்டிய பணமும் மற்ற வசதிகளையும் அளிக்க அவர்கள் முன் வந்துள்ளர். இதற்குத் தலைமை, நமது சென்னை மாகாணக் கவர்னர் மனைவியார் அவர்களே. அவர் நம் நாட்டு ஸ்திரீகளின் அபிவிர்த்திக்காகக் காட்டும் அன்பும் ஆதரவும் வியக்கத்தக்கதே. இதில் அங்கத்தினராக இருப்பதில் நமக்கும் பிறருக்கும் நன்மை உண்டு என அறிந்த அநேக ஸ்திரீகள், லேடி டாக்டர், ஹெல்த் விசிட்டர்கள், உபாத்தியாயினிகள் முதலியவர்கள், தம்மால் இயன்ற உதவியைப் புரிய முன் வந்துளர், அங்கத்தினர்களாயும் உளர்.

வேலைத் திட்டம்

இவர்கள் கவனிக்கும் விஷயம் சுகாதாரம், சுத்தம், முதற் சிகிச்சை, குழந்தை போஷிணி நிலையங்கள், மருத்துவப் பயிற்சி, குழந்தை சிகிச்சை, தோட்டப் பயிற்சி, சிக்கன வாழ்க்கை, போஷண ஆகாரம், தீ விபத்துகளை அணைத்தல் முதலியன. சுய அறிவும், சுய புத்தியும் உள்ளவர்கள், இந்த விதமாகத் தம் அறிவை வெளிப்படுத்தவும், அவர்களால் இன்னும் அநேகர் பயன்படவும் வசதி அளிப்பது இச்சங்கத்தின் நோக்கம்.

இச் சங்கம் போலவே இங்கிலாந்தில் "பெண்கள் நிலையம்" (Women's Institute) என்னும் சங்கங்கள் உள. இவ்விடத்தில் ஏழை, பணக்காரர் என்னும் வித்தியாசமில்லாமல் எல்லோரும் மாதத்தில் 3 அல்லது 4 தடவை கூடுவார்கள். பெண்களுக்குள்ள கஷ்டங்கள் என்னவென்பதையும், அதை எவ்வாறு போக்கலா மென்பதையும், பெண்கள் நிலைமை சமூக வாழ்க்கையில் சந்தோஷமாயும், திருப்தியாகவும் இருக்க என்ன செய்யலாம் என்பதைத் தர்க்கித்துப் பேசுகின்றனர். மேலும் சகோதர வாழ்க்கை, போஷிப்பு, ஆகாரம், சுகாதார வழியில் சமைக்கும் முறை முதலியவற்றிலும், இவ்விடத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதைப்போல் சங்கங்கள், நம் மாகாண முழுவதும் ஏற்படுத்துவதே பெண்கள் ஏ.ஆர்.பி. படையின் முக்கிய நோக்கம். சுய முயற்சி, சமூக தொண்டு செய்யும் ஆவலை யுடையவர்கள், தங்கள் பொழுதை உபயோகமாகச் செலவழிக்க இதில் அங்கத்தினராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இச் சங்க உத்தியோகத்தினர், எல்லோருக்கும் வேண்டிய எல்லாவித வசதிகளையும் செய்யத் தயாராக உளர். பெண்களுக்கே சக்தி அதிகம் ; அவர்களே தொண்டுக்கு சிறந்தவர்கள் ; இது உண்மையா இல்லையா என்பதை பெண்கள் ஏ.ஆர்.பி. படையினர் நன்றாக அனுபவத்தில் விளக்கி காட்டுகிறார்கள்—

["யுத்த முயற்சி" என்ற தொடரில் சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து 1944-மீ மே 13-உயில் ஒலி பரப்பப் பட்ட ஒரு பிரசங்கம்.]

ஜப்பானின் பகட்டு பேச்சு

(ராவ்ஸாகிப் டி. எஸ். நடராஜ பிள்ளை.)

கோவலன் கதை உலகமறிந்தது. தன் திருட்டை மறைக்க பொற் கொல்லன் பேசிய பேச்சுக்கள் கேட்கத் தக்கவை. அவை ஜப்பானியர் ரேடியோவில் பேசும் பேச்சுக்களை ஒத்திருக்கும். அரசன் ஆணையால் கோவலனைக் கொல்ல ஊர்க்காப்பாளரை அழைத்துச் சென்றான் கொல்லன். அவர்கள் கோவலனைக் கண்டதும் மயங்கினார்கள். முகத்தோற்றத்தாலும் மற்றைய அடையாளங்களாலும் அவன் அவர்கள் கண்களுக்கு கள்வனாய்த் தோன்றவில்லை. கொல்லப்பட வேண்டியவன் இவனா என்று கேட்டார்கள். உடனே கொல்லனுக்குக் கோபம் பிறந்தது. "இவனை யாரென்று நினைத்தீர்? மந்திரம் தந்திரம் கற்றவன், மந்திரத்தை நாவால் சொன்னால் தேவரைப் போல் மறைந்து விடுவான், தன் தெய்வத்தை மனத்தில் நினைத்தால், தன் கையில் உள்ள பொருளை நமக்குக் காட்டிவிட்டு ஓடிப் போவான்; கன்னக்கோல் கொண்டு பொருளைத் திருடினால் அவனைக் கண்ணால் பார்க்கவும் முடியுமா? அவனுக்கு இரவும் இல்லை, பகலும் இல்லை. ஒரு நாள் ஒரு திருடன் பகலில் தூதனாய் வந்தான்; இரவில் பெண் கோலத்தோடு அரசன் படுக்கையறை புகுந்து, விளக்கு நிழலில் ஒதுங்கி, இளங்கோ அரசனுடைய மார்பின் மணியாரத்தைக் கழற்றினான். வேந்தன் எழுந்து கத்தியை யுருவி அவனைக் குத்தினான். திருடன் கத்தியின் உறையை எடுத்து நீட்டினான்; கத்தி உறைக்குள் சென்றது; கத்தியைப் பிடுங்கிக் குத்தக் குத்தக் கத்தி உறைக்குள் சென்றதே யொழிய திருடன் மேல் படவில்லை. அரசன் அவனை மல்ல யுத்தத்தில் மடக்க முயன்றான். ஒரு பெரிய தூணைத் தன்னுருவம் போல் அரசனுக்குக் காட்டினான். அரசன் தூணைக் கட்டிக்கொண்டான். திருடன் மறைந்து போனான். இப்படிப் பட்டவனைக் கொல்லாமல் விட்டால் அரசன் கோபத்துக்கு ஆளாவீர்கள்" என்று திறமையோடு பேசினான். இவன் பேச்சால் மயங்கிய ஒருவன் கோவலனை வாளால் வெட்டி வீழ்த்தினான். அரசன் செங்கோலும் வளைந்தது. கொல்லன் பேச்சு நமக்கு நகைப்பைத் தருகின்றது. ஆனால் அக்காலத்தில் அவன் சொல்லிய வெல்லாம் உண்மை யென்று நம்பினவர்களும் இருந்தார்கள். பொய்யை உண்மையே போல் காட்டுவது ஒரு திருட்டு வித்தை. "பொய்யுடை வொருவன் சொல் வண்மையினால் மெய்போலும்மே, மெய்போலும்மே. மெய்யுடையொருவன் சொல்ல மாட்டாமையினால் பொய் போலும்மே பொய் போலும்மே".

ஜப்பானியர் இம்பால், கோஹிமாவைப் பற்றிப் பேசுகிற பொய்யெல்லாம் கேட்கின்றவர் காதுகளுக்கு மெய்போல் தோன்றுகின்றன. அவர்கள் அவ்வளவு அழுத்தந் திருத்தமாகவும், ஆவேசத்தோடும் பேசுகிறார்கள். வார்த்தைகளோ மிகக் கடுமையானவை. "கோஹிமாவைப் பிடித்து விட்டோம். 17-வது இந்தியப் படையைத் துடைத்துவிட்டோம். நேச நாடுகளின் முதுகெலும்பை உடைத்து விட்டோம். அவர்களுக்குச் சாவு மணி அடித்து விட்டது" என்று ஜப்பானியர் சொன்னால் உண்மையறியாத அயல்நாட்டாரும் பிறரும் இது மெய்தான் என்று எண்ணலாம். கொல்லன் பேச்சைக் கேட்டு நாம் நகைப்பதுபோல், பிற்காலத்தில் சரித்திரம் படிக்கிறவர் ஜப்பானியர் பேச்சைக் கேட்டுச் சிரிப்பார்கள். ஆனால் அடக்கத்தோடு நமக்குச் சொல்லப்படுகிற தந்திகள் தற்காலத்தில் ஜப்பானியர் பொய்ப் பிரசாரத்துக்கும் ஆவேசத்துக்கும் முன் நிற்க முடியாது. கோஹிமாவின் உண்மைதான் என்னவென்று ஆராய்வோம்.

இம்பால்—கோஹிமா

இம்பால் சமவெளி 700 சதுர மைல் விஸ்தீரண முள்ளது. அதைச் சுற்றி 5,000 அடி உயரமுள்ள மலைகள் இருக்கின்றன. சமவெளியில் நேசதேச துருப்புக்கள் இருக்கின்றன. மலையைச் சுற்றி ஜப்பானியர் நின்றாலும், இம்பால் முற்றுகையால் வெல்ல முடியாது. நேசதேச விமானங்கள் ஜப்பானியரை தலைகாட்ட வொட்டாமல் அடிக்கின்றன. அழிக்கின்றன. சமவெளிக்குள் இதுவரை ஜப்பானியர் நுழைய வேண்டு மென்று செய்த முயற்சிகள் எல்லாம் வீணாய்ப்போயின. இம்பால் இன்னும் நேசதேசத்தார் கைவசத்தில் தான் இருக்கின்றது. கோஹிமா இம்பாலுக்கு வடக்கே உள்ளது. கோஹிமாவுக்கு வடமேற்கே திமாபூர் என்றொரு ஊர் இருக்கின்றது. அஸ்ஸாமிலிருந்து செல்கின்ற இருப்புப் பாதை இந்தத் திமாப்பூரில் சேர்கின்றது. ஜப்பானியர் கோஹிமாவைச் சுற்றிச் சென்று திமாப்பூரைப் பிடிக்க முயன்றார்கள். கோஹிமாவைப் பிடித்துக் கொண்டு அங்கே நிலையூன்றி நின்று, திமாப்பூர் முதலான போக்கு வரத்து வழிகளை உடைக்கவேண்டு மென்பது அவர்கள் கருத்து. அது ஒன்றும் நிறைவேறவில்லை. எப்ரல் மாதம் 10-ந் தேதியில் கோஹிமாவை 6-ந்தேதியே பிடித்துவிட்டதாக டோகியோ ரேடியோ பறையறைந்தது. அதை ஒட்டி பெர்லின் ரேடியோ 13-ந்தேதியில் இம்பால் சமவெளி முழுவதும் ஜப்பானியர் கைவசமாய்விட்டது; எதிரிகள் சேனை சுற்றிக் கொள்ளப்பட்டது என்று கூவிற்று. ஒரு கோழி காலையில் கூவினால் எல்லாக் கோழிகளும் ஒன்றின் பின் ஒன்றாய்க் கூவுவதுபோல, எல்லா அச்சுநாட்டு ரேடியோக்களும் இந்தச் செய்தியை கூறிக்கொண்டே திரிந்தன. 14-ந்தேதியில் ரங்கூன் ரேடியோ 8,620 சதுர மைல் ஜப்பானியர் கைவசமாய்விட்டது என்று உறுதியாகச் சொன்னது. இம்பால் சமவெளி 700 சதுர மைல் என்று சொன்னேன். இந்த 8,620 சதுர மைல் எங்கிருந்து கிடைத்ததோ தெரியவில்லை. ஒரு வேளை இம்பால், கோஹிமா, திமாப்பூர் எல்லாவற்றையும் ஒரு சேர சுருட்டி சொன்னது போலும். இது அப்படியிருக்க, 14-ந் தேதியில் அதாவது ரங்கூன் ரேடியோ பேசிய அதே நாளில், அது பேசிய 3 மணி நேரத்துக்கெல்லாம் டோகியோ ரேடியோ சற்றே மாற்றிப் பேச ஆரம்பித்தது, அது ஆங்கிலத்திலே சொல்லும் போது "ஜப்பானியர் படைகள் எதிரிகளுடைய முக்கிய ஊராகிய கோஹிமாவைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன" என்றது. ஆகவே 6-ந்தேதி பிடிபட்டதாகச் சொன்ன ஊர் 14-ந்தேதி வரையிலும் பிடிக்கப் படவில்லை யென்று எதிரிகள் வாயாலேயே ஏற்பட்டு விட்டது. பொய்யையே மீண்டும் மீண்டும் உரத்த குரலிலும் உறுதியாயும் சொன்னால் அது மெய்யே யாகிவிடும் என்பது ஜப்பானியர் கொள்கை. இதையே ஹிட்லரும் தன்னுடைய புத்தகமாகிய மெயின் காம்பில் வெளிப்படையாய் எழுதியிருக்கிறார். இதுதான் அச்சு நாட்டாருடைய பிரசார ரகசியம். நேற்று கிடைத்த தந்தியில் கோஹிமாவில் சூழப்பட்டிருந்த நேசதேசப் படையோடு, வெளியிலிருந்து சென்ற படை சேர்ந்து கொண்டதென்றும், ஜப்பானியர் அங்கிருந்து துறத்தப்பட்டார்கள் என்றும் செய்தி கிடைத்திருக்கின்றது.

ஏன் இந்தப் பொய் ?

இதைக் கேட்கின்ற மக்களுக்கு ஏன் இம்மாதிரி ஜப்பானியர் பொய் சொல்ல வேண்டும் என்று தோன்றும். அதன் காரணத்தை இப்போது சற்றே விவரிக்கின்றேன். அச்சு நாட்டார் தங்கள் பிரசாரத்தால் நம்மைப் பயப்படுத்தி, நாம் அவசரத்தால் ஏதாவதொரு தப்பான ராணுவ முயற்சியோ, சூழ்ச்சியோ செய்து அவர்கள் கையில் சிக்கிக்கொள்ள வேண்டு மென்பது அவர்களுடைய முதல் எண்ணம். இரண்டாவதாக பசிபிக் பெருங்கடலில் அவர்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தோல்விகளை மறைத்து, தங்கள் நாட்டில் உள்ளவர்கள் அதைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருக்காதபடி தடுத்து, வேறொரு போக்குக் காட்டி, அதில் அவர்கள் எண்ணத்தை நாடவிடுவது மற்றொரு சூழ்ச்சி. பசிபிக் மஹா சமுத்திரத்தில் அவர்கள் பிடித்த தீவுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அமெரிக்கர் கைப்பற்றிக்கொண்டு வருகிறார்கள். ஸாலமன், காரலைன், நியூ கினி முதலிய தீவுகளிலெல்லாம் அவர்களுக்குப் பெருந் தோல்வி. அமெரிக்கர் தவளை பாய்வது போல் தீவுகளைத் தாவித் தாவிப் பற்றிக்கொண்டே போகிறார்கள். அப்படிப் பிடிக்கும் போது

(9-ம் பக்கம் பார்க்க)

மந்தம் தீர்ந்தது!

வியாதி தீர்ந்தது!

போனவாரம் எழுதும் போது நேச தேசப் போர் முனைகளில் இருந்த மந்தம் எனும் வியாதியை, நேச தேச வீரர்கள் இப்பொழுது தீர்த்துவிட்டார்கள்! பல போர் முனைகளிலிருந்தும் நல்ல சேதிகள் பறந்து வந்திருக்கின்றன.

நமக்கு அருகில் உள்ள பர்மா முனையை எடுத்துக் கொள்ளலாம். இங்கே கொஹிமா எனும் நகரிலே, நேச தேசப் படைகள் ஜப்பானியரை அலற அடித்திருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் இந்த ஊரிலே முக்கால் பாகம் ஜப்பானியர் வசம் இருந்தது. இப்பொழுதோ, பாதிதானிருக்கிறது. அந்தப் பாதியை வைத்துக் கொண்டும் அவர்கள் சுகமாக இருக்கிறார்களா? அது தான் கிடையாது.

ஓய்வு ஏது?

பிரிட்டிஷ் படைகளும், இந்திய வீரர்களும் அங்குள்ள ஜப்பானியருக்கு ஒரு நிமிஷ ஓய்வுகூட கொடுத்தால்தானே? நேச தேச விமானிகள் சென்ற சில தினங்காளாகப் போடும் போட்டைக் கண்டு ஜப்பானியர்களே திகைத்துப் போயிருக்கக் கூடும். நமது படைகளைச் சேர்ந்தவர் குண்டு வீசினால், எதிரி கை உள்ள அவர்கள் பதிலுக்குச் சுட வேண்டுமோ இல்லையோ, அது தான் கிடையாது. அவ்வாறு சுட்டால், தங்களுடைய பதுங்கு மிடங்கள் எங்கே தெரிந்து விடுமோ, அப்புறம் நேச தேச விமானங்கள் எங்கே தங்களைச் சுட்டுப் பொசுக்கிவிடுமோ என்ற பீதி ஜப்பானியர்களுக்கு இருக்கிறாப் போலிருக்கிறது.

யார் விடுகிறார்கள்?

கொஹிமா அருகே நிறைய ஜப்பானியர்கள் அங்கங்கே பிரிந்து கிடக்கிறார்கள். அவர்கள் ஒன்றுகக் கூடலாம் என்று பார்க்கிறார்கள். ஆனால், அவர்களை யார் விடுகிறார்கள்? எவ்வளவு சிரமமிருந்தாலும் பரவாயில்லை என்று நம்மவர்கள் அவர்களுடைய மண்டைகளைச் சிதற அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிணந் தூக்கிகள்

எப்பொழுதும் போலவே, போர்க்களத்திலே போராடுவது தவிர, பிணந் தூக்கும் வேலையையும் ஜப்பானியர் மும்முரமாகச் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். ஒரு இடத்திலிருந்து கொஞ்சம் பின்வாங்க நேர்ந்தால், முதலில் அந்த இடத்தில் கிடக்கும் ஜப்பானிய சவங்களை முதலில் அப்புறப்படுத்தி விடுகிறார்களாம் அவர்கள். அவ்வாறு செய்யும் பொழுது இன்னும் சிலர் சவங்களாகிறார்களாம்.

மண் ருசி பார்க்கிறார்கள்

கொஹிமாவிற்கு அருகே ஜப்பானியர் நிறைய வெடிமருந்துகளைச் சேமித்து வைத்திருப்பதாகத் தெரிகிறதாம். கூடிய சீக்கிரமே அப்பிரதேசத்தில் நடக்கக் கூடிய பெரியதொரு போருக்காக இதெல்லாம் சேகரித்து வைத்திருக்கப்படக் கூடும் என்று தோன்றுகிறது. ஏதோ இந்தியாவிற்குள் நுழைந்தார்கள், இந்தியாவையும், இந்திய மண்ணையும் பார்த்து விட்டுப் போகட்டும் என்று விட்டிருக்கிற ரீதியில் தான், ஜப்பானியர்களை இந்திய எல்லையில் விட்டு வைத்திருக்கிறார்கள் நம்மவர்கள். இந்திய மண்ணை ஜப்பானியர் கௌவி, ருசிபார்க்க நம்மவர்கள் நிறைய 'சான்ஸ்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு ருசி பார்க்கும் ஜப்பானிய சூரர்கள் அந்த மண்ணின் ருசி எப்படி யிருக்கிறது என்று எழுந்து சொல்வதே இல்லையாம்.

எல்லாம் காரணமாகவே!

இப்பொழுது ஜப்பானியர் இந்திய மண்ணில் நின்று போராடுவது எல்லாம் சில காரணங்களை உத்தேசித்து தான். பர்மாவிற்குள், தட்டுத் தடங்கலின்றி நேச தேசப் படைகள், ஆகாய மூலமாகப் போய்க் குதித்து விட்டன; வேறு சில படைகள் சீனர்களுடன் வடக்கே யிருந்து பர்மாவிற்குள் புகுந்திருக்கின்றன. அவற்றிற் கெல்லாம் இந்தியாவிலிருந்து உதவி போய்ச் சேர வேண்டும். சீனத்திற்கும் உதவி போக வேண்டும். சீனத்திற்குப் புதிதாகப் போடப்பட்ட ரஸ்தா ஒன்று வேறே இருக்கிறது. இவற்றை யெல்லாம் பாழ்படுத்த வேண்டும் என்பது ஜப்பானியரது நோக்கங்களில் ஒன்றுகும். இரண்டாவதாக, தென் மேற்கு பஸிபிக்கில், ஒரு நாயை அடிப்பது போல், அமெரிக்கர்களும், ஆஸ்திரேலியர்களும் ஜப்பானியரை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அறிந்து ஜப்பானிலே முணுமுணுப்பு இருப்பது இயற்கை தானே? அதைச் சரிக்கட்ட, இந்தியாவிலிருந்து ஏதாவது கொஞ்சம் உற்சாக மூட்டும்படியான சேதிகளைக் கொடுக்க வேண்டாமா? அதற்காகவும் இந்தப் போர் விஷயத்தில் ஜப்பானியர் இவ்வளவு முனைந்திருக்கலாம். மூன்றுவதாக, தம் வசமுள்ள பிரதேசங்களில் வசிக்கும் இந்தியர்களை தாஜா செய்து வைத்துக்கொள்ள, தாங்கள் பிரமாதமாக சாதிக்கக்கூடியவர்கள் என்று காட்டிக் கொள்ள வேண்டாமா?

உள்ள குறைகள்

ஜப்பானியரிடமோ வேண்டிய விமானங்கள் கிடையாது. அவை இருந்திருந்தால், அஸ்ஸாம் போர் இப்படியா இருந்திருக்கும்? ஏதோ திருட்டுத் தனமாகப் பதுங்கி பதுங்கிவர அடர்ந்த காடுகளும், அதிமோசமான மலைகளும் அவர்களுக்கு உதவியாக இருக்கின்றன. ஆகவே, எப்படியோ படைகளையும், சாமான்களையும் படாத பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள்.

மத்ய பர்மாவிலே, சென்ற நாற்பத்து மூன்று நாட்களில், நமது படைகள் இருபத்தைந்து மைல்கள் தான் முன்னேறியிருக்கின்றனவாம். ஜப்பானியருக்கு நம்மிடமுள்ள பயத்திலே, பெரிய பெரிய பீரங்கிகளையும், டாங்கி, சுடும் துப்பாக்கிகளையும் இப்பொழுது பர்மா போர் முனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்களாம். நம்மவர்கள் செய்யும் காரியம் கடினமான காரியம் தான். ஆனால் இது போன்ற வேலைகளைச் செய்தால் தானே, நம்மவர்களுக்கு உத்சாகம்!

கொஹிமா அருகே உள்ள ஜப்பானியப் படைகளிடம் பிரமாதமான உணவுப் பொருள்களோ, மருந்துகளோ, ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ இல்லை. கழுதை மேலே தான் சாமான்கள் சவாரியாக வந்து சேரவேண்டும். ரோமம் சுட்டுக் கரியாகப் போகிறதா என்ன? ஜப்பானியரின் போக்கு வரத்துப் பாதைகளை நம்மவர்கள் தகர்த்தெறிய எறிய, அவர்கள் பாடு சிரமமாகவே இருக்கிறதாம்.

பல கஷ்டங்கள்

இப்பொழுது அவர்களிடமுள்ள மேற்கண்ட உணவு, மருந்து, வெடி மருந்து கையிருப்புகள் எல்லாம் அதி வேகமாகக் குறைந்து வருகின்றன என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அங்கே, ஒரு கோழிக்குஞ்சோ, ஒரு நாயோ, ஒரு பன்றியோ கிடையாதாம். எல்லாம் 'ஸ்வாஹா!' பண்ணியாயிற்று.

அநேக ஜப்பானியருக்கு மலேரியா ஜுரம் அதி கடுமையாகத் தாக்கியிருக்கிறதாம். வெறும் கொயினா மாத்திரை தான் மருந்தாம். காயம் பட்டவர்களுக்குக் கட்ட புதுத்துணிகள் கிடையாதாம், ஒரு வருக்குக் கட்டப்பெற்றது தான், இன்னொருவருக்கு உபயோகிக்கப்படுகிறதாம். ரணம் சீக்கிரம் குணமாகுமோ இல்லையோ! இப்படியே எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும்?

மணிபுரி நடனமா?

பருவ மழைகள் ஆரம்பமாக வேண்டுமென்று ஜப்பானியர் வருண ஜபம்கூட செய்து கொண்டிருக்கக் கூடும். ஏனென்றுல், தாங்கள் பிடித்ததாக அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டுள்ள ஊர்கள், திரும்பவும் நேச தேசத்தார் கைகளுக்குப் போய் விடக்கூடாது; அப்புறம் ரொம்ப அவமானம் என்று அவர்கள் நினைக்கக் கூடும் அல்லவா? இம்பாலைப் பிடிக்க அவர்கள் கஜகர்ணம் போட்டுப் பார்த்தார்கள். ஏதாவது பலித்ததா? இப்பொழுது இம்பால் நினைவையே அவர்கள் விட்டு விட்டதாகவே தோன்றுகிறது. மணிபுரி மீது கைவைக்க வந்தவர்கள், 'அப்பப்பா! அம்மம்மா!' என்று அலறித் துடித்து, குதித்தாடச் செய்து விட்டார்கள் இந்திய வீரர்களில் பலர். மணிபுரி நடனமே ஆடினார்களோ என்னமோ அந்த ஜப்பானியர்!

சென்னையிலிருந்து சென்ற வீரர்களில் பலர், பல சந்தர்ப்பங்களில் பிரமாத

மாகச் சண்டை போட்டிருக்கிறார்கள் என்பது போர் முனையிலிருந்து வரும் சேதிகளிலிருந்து தெரிகிறது. தாங்கள் யாருக்கும் பயந்தவர்களல்ல; தங்கள் மூளைகள் அபாரமாக ஆபத்து சமயங்களிலும் வேலைசெய்யும் என்பதை அவர்கள் வெகு அழகாக ரூபித்திருக்கிறார்கள்.

இந்தியர் என்றால் கிலி

ஜப்பானியர்களுக்கு இந்திய சோல்ஜர்களைக்கண்டால் ரொம்ப பயமாம். இவர்களைத் தந்திரத்தாலேயே மடக்கலாம் என்று அவர்கள் நினைக்கிறார்களாம். அவர்கள் செய்யும் தந்திரமெல்லாம் அவர்களுக்கே கெடுதலாக முடிகிறதாம்.

ஒரு இடத்திலே, இந்திய வீரர்கள் ஒரு தட்டையான மலைச்சிகரத்தை அடைந்து விட்டார்களாம். அங்கிருந்து தலை தூக்கித்தான் அடுத்த பக்கத்தில் உள்ள ஜப்பானியரைப் பார்க்க வேண்டுமாம். எதிரிகள் என்ன செய்கிறார்கள், எங்கிருக்கிறார்கள் என்பதை அறிய, ஜப்பானியர் நல்ல ஹிந்தியிலே, 'மணி என்ன ஆச்சப்பா?' என்று இரு தடவைகள் கேட்டார்கள். ரொம்ப பழகின நண்பன் மாதிரி நம்மவர்கள் அதற்குப் பதில் சொல்லத்தான் செய்தார்கள். ஆனால் வாயால் எதும் பேசவில்லை. கையால் ஒரு குண்டை எறிந்து, ஜப்பானியர் கேட்ட கேள்விக்குப் பதிலும் சொல்லி, மறுபடியும் அவர்களைப் பேசாதவாறு செய்து விட்டார்களாம். இது மாதிரி ஆயிரம் தந்திரங்கள் நாம் சொல்லிக் கொடுப்போமே அவங்களுக்கு, நம்மிடம் வந்தா அவர்கள் இந்த வேலையைக் காட்டுகிறார்கள்! அட பித்துக் குள்ளிகளா?

அரக்கான் போர் முனையிலே கால தேச வர்த்தமானங்களை உத்தேசித்து, ஓரிரண்டு இடங்களை நமது படைகள் காலி செய்திருக்கின்றனவாம். இந்தப் பிரதேசத்திலே ஆபிரிக்கப் படைகள் இருந்தன. விரோதிகளுக்கு இங்கு ஒன்றும் விட்டுக் கொடுத்து விடவில்லை நாம்.

பசிபிக்கிலே பலி

தென் மேற்கு பஸிபிக் பிரதேசத்திலே, ஜப்பானியரின் மூழிகள் பிதுங்கிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அங்கே அமெரிக்கர்களும், ஆஸ்திரேலியர்களும் இருந்தார்களா, இப்பொழுது அங்கே அந்த கோஷ்டிகளோடு பிரிட்டிஷ் கப்பல்களும், ஆட்களும் தோன்றுகிறார்கள் என்றால், ஜப்பானியரது முழிகள் பிதுங்காமல் இருக்க முடியுமா என்ன?

சென்ற சில தினங்களாக அமெரிக்க விமானிகளும் யுத்த கப்பல் தலைவர்களும் ஒன்று கூடி, ட்ருக் துறைமுகத்தையும், அது உள்ள தீவிற்குத் தெற்கேயுள்ள வேறு சில தீவுகளையும் வெகுக் கடுமையாகத் தாக்கி யிருக்கின்றனர். சென்ற இரண்டு வருடங்களில் மட்டும் 1,727 ஜப்பானியக் கப்பல்கள் அரோஹரா ஆகியிருக்கின்றன. கடற்கரை யோரம் ஓடிக் கொண்டிருந்த வியாபாரக் கப்பல்கள் பல, அமெரிக்க விமானங்களில் உள்ள குண்டுகளுக்குப் பலியாகி யிருக்கின்றன. சென்ற வாரத்தில் நடந்த இரண்டு நாள் சண்டையில் மட்டுமே 126 விமானங்களை ஜப்பானியர் இழந்திருக்கிறார்களாம்.

இது சாத்யமா?

இம்மாதிரி இழந்து கொண்டே யிருப்பது ஜப்பானுக்கு சாத்யமில்லையே! நேச தேச விமான ஆதிக்கத்திற்கு எல்லோரும் அடங்கிப் பயந்திருக்க வேண்டியது தான். அந்தப் பயத்திலே தான், ஜப்பானியக் கடற் படை, சிங்கப்பூர், அம்பாய்னா போன்ற உள் பிரதேசங்களுக்குள் போய் மறைந்து கிடக்கின்றன. ஜப்பானிடம் இருந்த இரு பெரிய யுத்தக் கப்பல்கள் முன்பு மூழ்கடிக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக வேறு இரு கப்பல்களை அவர்கள் கட்டி யிருக்கிறார்களாம். ஆனால், க்ருய்ஸர்களும், நாசகாரிகளும் இல்லாத காரணத்தால், எங்கும் போருக்குப் போய் சமாளிக்க தைரியம் வரவில்லை அவர்களுக்கு. நமது கப்பற் படை வருகிற தென்றால் ஓட்டமெடுக்கத் தான் தோன்றுகிறது. அவர்களுடைய கப்பற் படை பலத்திலே மூன்றிலொரு பங்கை நம்மவர்கள் காலி செய்திருக்கிறார்கள். எல்லாம் கடல் வழியே போய் ஆக வேண்டிய காரியமோ இல்லையோ, இங்கு கொஞ்சம் நிதானமாகத தான் வேலைகள் நடக்கும்!

ஆனால், அங்கே ஜரூர்

ஆனால், சீமையிலே அதி ஜரூராகவே எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. போன வாரம் அங்கு, இரவு வேளையில் பிரமாண்டமான படையெடுப்பு ஒத்திகை ஒன்று நடந்ததாம். அந்த ஒத்திகையிலே, எண்ணற்ற விமானங்கள் பல விதப் படைகளைக் கொண்டு வந்து இறக்கின. அசல் படையெடுப்புப் போலவே இருந்ததாம் எல்லாம். ஐஸ்லாந்திலேயும், கப்பல்களும், விமானங்களும் குவிந்திருப்பதாக ஒரு சேதி கூறுகிறது. அங்கும், சீமையில் உள்ளது போலவே, பிரயாணக் கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கின்றனவாம். ஆகவே, நேச தேசத்தார், நார்வே மீது பாய்வார்களோ என்ற பீதி ஜெர்மனியருக்கு ஏற்பட்டிருக்கிறப் போலிருக்கிறது. நார்வே அருகே ஜெர்மன் பாராக் கப்பல் கோஷ்டியுடன் சென்ற கப்பல்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கி யிருக்கின்றன.

ஒய்வு ஒழிவின்றி உதை

பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள் மட்டும் எப்பொழுதும் போலவே ஓய்வு, ஒழிவின்றி ஜெர்மனியையும், ஜெர்மன் வசப்பட்ட பிரதேசங்களையும் போடு போடென்று போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆயிரக் கணக்கில் தான் குண்டு வீசும் விமானங்கள் ஜெர்மனி மீது பறந்து செல்கின்றன. ஆயிரம் குண்டு வீசும் விமானங்கள் என்றால், அவற்றைப் பாதுகாக்க எத்தனையோ போர் விமானங்கள் இருக்குமே! அர்ஜுனன் காண்டாவனத்தின் மீது சரப்பந்தல் போட்டானுமே, அது போல இருக்கும் இந்த விமானங்கள் வானத்திலே போகும் போது பார்த்தால். வெளியிலிருந்து பார்ப்பதாவது? ஜெர்மானியரும், அவர்களது பிடியில் அகப்பட்டவர்களும் மேற்கண்ட விமானங்கள் தலைமீது பறக்கும் பொழுது, வயிறு கலங்க, பதுங்கு மிடங்களில் அமுங்கிக் கிடக்கமாட்டார்களா? பெர்லின் மீது எவ்வளவு குண்டுகள் விழும்? ஒரு நாளிரவில் 4,500 டன் எடையுள்ள குண்டுகள் வீழ்வது என்றால் எப்படி யிருக்கும்? யுத்தத்திற்கு உதவும் பல தொழிற் சாலைகள் பெர்லினி லிருக்கின்றன. அவற்றில் ஐம்பது, அறுபது என்று பாழாகிக் கொண்டிருக்கின்றன. இரண்டாவதுபோர் முனையைத் தொடங்கு முன், எல்லாவற்றையும் சரிப்படுத்தி வைக்கிற ஏற்பாடுபோ லிருக்கிறது இதெல்லாம்.

அகப்படுகிற இடத்தில் அறை

இத்தாலியிலிருந்தும் இதே போல் ஆயிர ஆயிர விமானங்களை அனுப்பி ருமேனியா, பல்கேரியா, தென் ஜெர்மனி, பிரான்ஸில் ஒரு பகுதி இத்தனையையும் தவிடுபொடியாக்கப் போகிறார்கள் நேச தேசத்தார் என்றொரு பேச்சிருக்கிறது. ஜெர்மானியரை இப்பொழுது எங்கிருந்து அடிப்பது, எங்கிருந்து வேண்டாம் என்ற பிரச்னையே இப்பொழுது எழவில்லை. கிடைக்கிற சந்தர்ப்பங்களை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, அகப்படுகிற இடத்தில் எல்லாம் அறை வைக்க வேண்டியது தான் என்ற கொள்கையே இப்பொழுது அனுஷ்டிக்கப்படுகிறது.

இத்தாலியிலே!

வட இத்தாலியை நேச தேச விமானங்கள் அடித்திருக்கின்றன. ரயில் போக்குவரத்துப் பாதைகள், மலைப் பாதைகள், வெடி மருந்துக் கிடங்குகள் எல்லாம் பல இடங்களில் 'கோவிந்தா' ஆகியிருக்கின்றன. இது தவிர, அன்ஸியோ கடற்கரைப் பிரதேசத்திலே ஜெர்மானியர் கொஞ்சம் வாலாட்டிப் பார்த்தார்களாம். அதை நறுக்க நேச தேசத்தார் கத்தியை எடுத்தார்களாம். நாஸிகள் எடுத்தார்களாம் ஓட்டம்.

ருஷ்யாவிலே!

ருஷ்யாவிலேயும் மந்தம் நீங்கி யிருக்கிறது. ருமேனியத் தலை நகரை ருஷ்ய விமானங்கள் ஒரு கை பார்த்திருக்கின்றன. இதிலிருந்து அயோக்கியனுக்கும் சரி, அவனுடன் சகவாசம் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும் சரி என்றோ ஒரு நாள் எதிர் பாராது அவஸ்தை ஏற்படலாம் என்பது ஊர்ஜிதமாகிறதல்லவா?

ருஷ்யர் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியாமல் ஹிட்லர் தடுமாறிக் கொண்டிருக்கிறார். வடக்கே பால்டிக்

பிரதேசங்கள் வழியாகப் பாய்வார்களா ? அல்லது வார்ஸாவைப் பிடிக்க முயலுவார்களா ? அல்லது ஹங்கேரி மீது, கார்ப்பேதிய மலைகள் வழியாகவும், ருமேனியா வழியாகவும் இடுக்கி போல் தாக்குவார்களா ? என்பது தெரியவேணும் அவருக்கு.

பீதியின் அளவு

இப்போதைக்கு ருமேனியாவிற்குத் தான் அதிக ஆபத்து. அதனுல், 1939-லே, பல்கேரியாவிற்குக் கொடுத்திருந்த விமானங்களை ஹிட்லர் திரும்ப வாங்கி, ருமேனியப் போர் முனைக்கு அனுப்பியிருக்கிருராம். இதிலிருந்து ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும் மனக் கவலை, பீதி ஆகியவற்றின் அளவை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம் !

ஸெபாஸ்டபோல் மர்மம்

ஸெபாஸ்டபோலில் ருஷ்யர்கள் திரும்பவும் போரைத் தொடங்கிவிட்டார்கள் ; ஓரிடத்தில் ஜெர்மன் அரணையும் துளைத்து விட்டார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. ஸெபாஸ்டபோலிலே சிக்கியுள்ள நாஸி வீரர்களை சட், புட் என்று ஹதம் செய்வது ஒரு பிரமாதமல்ல. அவர்களுக்கு உதவவும், வேறு இடங்களுக்குச் சாமான்களையும், துருப்புகளையும் ஏற்றிச் செல்லவும் போகும் ஜெர்மன் பாரா கோஷ்டியுடன் விரையும் கப்பல்களை ருஷ்ய விமானங்கள் கருங் கடலில் மூழ்கடித்திருக்கின்றன. எப்படியும் ஸெபாஸ்டபோல் தங்கள் கைகளுக்கு வந்தே தீரும் என்ற நம்பிக்கை ருஷ்யாகளுக்கு ஏற்பட்டிருக்கிறது ஆகவே, அநாவசியமாக ஆட்களைச் சேதபபடுததுவானேன் ; தாமாகவே வெடி மருந்துகளும், உணவும், ஜல சப்ளையும் இல்லாது போனுல், நாஸிகள் சரணுகதி யடைந்து விட்டுப் போகிருர்கள் என்று ருஷ்யர்கள் தூரத்திலேயே இருந்து உரல் வெடிகளையும், பீரங்கி வெடிகளையும் பிரயோகித்துக் கொண்டேயிருக்கிருர்கள்.

ராமெல் துரை பேசுகிருர்

ராமெல் துரை, ஜெர்மன் பாதுகாப்பு ஏற்பாடுகளை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வந்திருக்கிருர். 'நேச தேசப் படைகள் இரண்டாவது போர் முனை என்று வந்து இறங்கினுல், பல அதிசயமான எதிர்ப்புகளைக் காண்பார்கள். நமது பாதுகாப்பு ஏற்பாடுகள் ரொம்பத் தரம். நாம் தைரியமாக இருக்க வேண்டிய காரணங்கள் இருக்கின்றன' என்று கூறியிருக்கிருர் அவர். அவர் ஏற்பாடு செய்து வைத்திருக்கும் அதிசயங்களை விட பல மடங்கு அதிகப்படியான அதிசயங்களுக்கு நேச தேசத்தார் ஏற்பாடு செய்து வைத்திருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திடீர்த் தாக்குதல்

போன வாரம், திடீரென்று மணிபுரியைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து ஜப்பானியர், தங்களது இழந்த பிரதேசங்களைத் திரும்பப் பிடிக்க கடும் முயற்சிகள் செய்யத் தொடங்கிவிட்டார்களாம். மழை வரு முன்னே பார்ப்பதெல்லாம் பார்த்து விடவேண்டுமல்லவா ?

நேச விமானங்கள், முதன் முறையாக சைகோன் நகரைத் தாக்கினவாம். இந்தியாவில் உள்ள விமானங்கள், வர வர அபார வேலைகள் பலவற்றைச் செய்யச் சித்தமாக இருக்கின்றன.

ஆக மொத்தம் அமைதி என்பது எங்கும் கலைந்து விட்டது. மந்தம் என்பதும் நீங்கிவிட்டது. வீணுக யாராவது ஆறப் போடுவார்களா என்ன இப்பொழுதெல்லாம் ?

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

இடையிலுள்ள ஜப்பானியப் படை அகப்படுக் கொள்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் நியூ கினித் தீவில் ஜப்பானுக்குரிய ஹாலண்டியா என்னும் இடத்தை நேசதேசத்தார் கைப்பற்றிக் கொண்டார்கள். சுமார் ஒரு லட்சம் ஜப்பானியர் இந்த இடத்தில் பிரிக்கப்பட்டு தங்கள் கூட்டத்தாரோடு சேர வழியில்லாமல் திகைக்கிருர்கள். இதே போல் இதற்கு முன் பிஸ்மார்க் தீவுகளிலும் சாலமன் தீவுகளிலும் இருந்த ஜப்பானியர் பிரிக்கப்பட்டு $2\frac{1}{2}$ லட்சம் ஜப்பானியரில் ஒரு லட்சத்துக்கு மேலாக சேதப்பட்டிருக்கிருர்கள். ஜப்பான் நாட்டில் இதைக் கேட்கின்ற மக்களுக்கு மனம் எப்படித் திடுக்கிடும் ? இதை மறைக்கத் தான், " இதோ பார் இம்பாலைப் பிடித்து விட்டோம். கோஹிமாவைக் கைக் கொண்டு விட்டோம்" என்று பராக்குக் காட்டுவது.

டோஜோவின் புழுகு மூட்டை.

ஜப்பானியர் தங்கள் நாட்டாரைச் சக்கிரவர்த்தியின் குழந்தைகள் என்று எண்ணுகிருர்கள். ஆகவே அவர்களைக் குழந்தைகள் போல் நடத்தி வேடிக்கைக் காட்டி எண்ணத்தை மாற்றுகிருர்கள். அவர்களுடைய முதன் மந்திரி பேசிய பேச்சிலிருந்தே இது வெளியாகிறது. மார்ச்சு 22-ந்தேதியில் ஜப்பானியச் சட்ட சபையில் டோஜோ பேசும் போது "பசிபிக் கடலில் சண்டை போக்கு சென்ற ஆறு வாரங்களாக மிகவும் கவலைப்படத் தக்கதா யிருக்கிறது ; முதல் வந்த நேச தேசப் படைகளை ஜப்பானியர் பின்னடையச் செய்து விட்டார்கள் ; ஆனுல் மேலும் மேலும் படை யெடு ப்பையும் தாக்குதலையும் எதிர்ப் பார்க்கிருேம். நமது நாட்டினுடைய சரித்திரத்திலேயே இச்சமயம் மிகவும் சோதனைக்குறியதாயிருக்கிறது. ஆகையால் ஜப்பானியரெல்லாம் பெருந்தியாகம் செய்யவும் ஓயாத முயற்சிகளைச் செய்யவும் ஆய்த்தமாயிருக்க வேண்டும்" என்றுர். இப்படித் தங்கள் நாட்டாரிடம் உண்மையைப் பேசி கவலையைத் தெரிவித்தவர், சில நாட்களுக்குள், அதாவது ஏப்ரல் 15-ந் தேதி இதே இம்பால்—கோஹிமா விஷயமாய்ப் பேசிய ஆடம்பரப் பேச்சைக் கேளுங்கள் " ஜப்பானிய படைகள், எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்து கொண்டே போகின்றன." இது ரேடியோப் பேச்சு. பிரசாரப் பேச்சு ; தங்கள் நாட்டாருக்குப் பராக்குக் காட்டும் பேச்சு. இம்பால் பிரதேசத்தில் இவர்கள் தோற்று விட்டார்கள் என்று தெரிந்தவுடன், இனி அரக்கான் முனையில் கலடான் பகுதியில் வெற்றி என்று பேச ஆரம்பிப்பார்கள் போலும். அல்லது ஜெனரல் மவுண்ட் பேட்டனைப் பற்றி இன்னும் பலபடப் பேசுவாாகள். அவர் தன்னுடைய படைவீட்டைக் கண்டிக்கு மாற்றியதே "அவர் தோல்வியைப் பொறுக்க மாட்டாமல் தலை மறைந்து கொண்டார் ; அடுத்தபடி பர்மாவுக்கு படையை தானே நேரே செலுத்த வருவார்" என்று பேசுகிருர்கள். அவர் மேல் நாட்டிலிருந்து வரும்போதே டில்லியில் சில நாள் இருந்து விஷயங்களை அறிந்து கொண்டு இலங்கைக்குச் செல்வார் என்று தெரிவிக்கபபட்டிருந்தது. இலங்கை இச் சண்டையில் நடுஸ்தானத்தை வகித்திருக்கிறது. அங்கிருந்து ஜப்பானியரைத் தாக்குவது எளிது. அதனுல் தான் ஜப்பானியரும் இலங்கையைத் தாக்கினுர்கள். மவுண்ட் பேட்டன் அங்குச் சென்ற சில நாளைக்கெல்லாம், சுமத்ரா தீவில், சிங்கப்பூருக்கு அருகாமையில் உள்ள சாபாங் என்கிற இடத்தில் நேசதேசத்தாரின் கப்பற் படை சென்று குண்டுமாரி பொழிந்து, பல ஜப்பானியக் கப்பல்களையும் ரேடியோ நிலையங்களையும் அழித்து விட்டது. இதனுலே இதுவும் ஜப்பானியருடைய திட்டபபடி அந்த மககளின் எண்ணத்தை மாற்றுவதற்காகப் பேசும் பேச்சென்று ஏற்படுகின்றது. இந்திய மக்கள் இவைகளினுல் ஏமாருமலும், வீண் கவலை கொள்ளாமலும் இருப்பார்களாக.

—சமீபத்தில் சென்னை வானெலி நிலயத்திலிருந்து ஒலி பரப்பிய பிரசங்கம்.

நாமும் யுத்தமும்

மிஸ்டர் டி. ஆர். சுந்தரம்

அறம் வளர்க்கும் அறிவாளிகளைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் புண்ணிய பூமியாம் நம் தாய் நாட்டின் அருந்தவப் புதல்வர்களே !.

உலக இரண்டாவது யுத்தம் ஆரம்பித்து இன்றைக்கு 4 வருஷம், 7 மாதம், 18 நாளாகின்றன. 18 நாட்களில் நடந்த யுத்தத்தை மகாபாரத யுத்தம் என்று வழங்கினால் இந்த 1,688 நாட்களாக நடக்கும் யுத்தத்தை—ஏன் இன்னும் நடக்கயிருக்கும் யுத்தத்தை—உலக யுத்தம் என்று கூறுவது மிகையாகாது.

இதனால் நமக்கு பலவகையான, அதுவும் மிகவும் மகத்தான கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை அனுபவித்துத் தான் வருகிறோம். அப்படி இருந்தும் சிலர் இந்த யுத்தம் நமது யுத்தம் அல்ல, யார் வீட்டிற்கு வந்த விருந்தோ என்று வாளா யிருப்பதைக் கண்டாலும், கேட்டாலும் உள்ளம் வெந்து புழுங்குகின்றது. இந்த தேசத்தில் நாம் தனித்து இயங்கலாமென்றாவது அல்லது எப்படியோ தப்பித்துக் கொள்ளலாமென்றாவது நினைப்பதை விட மிகவும் பயங்கரமான யோசனை வேறொன்றுமே இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் கையை நெஞ்சில் வைத்து உறுதி கூறட்டும். சொல்லும் செயலும் ஒன்றாக இருந்து சொல்பவர்களாக இருந்தால் ஒரு பதிலைத் தான் கூறமுடியும்—அதாவது ஆம். யுத்தம் நமது யுத்தம் தான். யுத்தத்தில் வெற்றியடைய பாடுபடவேண்டியது நமது கடமைதான் என்பதே தவிர வேறில்லை.

முசோலினி கவிழ்ந்தான்

அச்சு நாட்டு அரக்கர்கள் மூவரில் முசோலினி கவிழ்ந்தான். ஹிட்லர் 1939–40, 41 வருஷங்களில் ஜம்பப் பேச்சுக்கள் பேசிவந்து, வீர ரஷ்யாவுடன் முட்டிக்கொண்டு இப்போது ஆழம் தெரியாமல் எண்டா காலை விட்டோம் என்று கவலைப்படுகிறான். பேச்சின் சுரமும் கொஞ்சம் ஈனசுரமாகவே இருக்கிறது. யுத்தத்தைப் பின்னால் விவரமாக எழுதுங்காலத்தில் ஆண் பெண் அடங்கலான ரஷ்ய வீரர்களின் தீரச் செயல்களை பொன் எழுத்துக்களால் தான் பொறிக்க வேண்டும். உலகத்தில் உள்ள எல்லா தேசங்களும் ரஷ்யாவிற்கு கடமைப்பட்டிருக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். ரஷ்யர்களின் படிப்படியான வெற்றிக்கு ஆப்பிரிக்காவிலும், மத்தியதரைக் கடலிலும் பிரிட்டிஷ் அமெரிக்க இந்திய வீரர்கள் அஸ்திவாரம் போட்டார்கள். நான்காவது இந்திய டிவிஷனில் சேர்ந்த நம் நாட்டு வீரர்கள் மகா உன்னதமான கியாதி பெற்றார்கள். நமது உள்ளம் பூரிக்கிறது. மகிழ்ச்சியும் அடைகிறது. டுனிஸியா வெற்றி என்ன. நாடு இழந்த அபிசீனியா சக்ரவர்த்திக்கு முடிசூட்டி மீண்டும் நாட்டைக் கொடுத்தது என்ன. மத்திய தரைக்கடலை நமது வசமாக்கியது என்ன. இன்னும்வெற்றிகள் பெற்றன. இந்த நேரத்தில் ஜெர்மானியர் ஈவு இரக்கமற்ற வகையில் பெரும் அக்கிரமங்களைச் செய்து வருகிறார்கள். இறுதி காலம் நெருங்கிவிட்டதென்று யுத்த தர்மங்களையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு தலை தடுமாறித் திரிகிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி சீக்கிரத்தில் போட வேண்டாமா ?

கிழக்கே அச்சு நாட்டு கூட்டாளி குள்ள ஜப்பான் இருக்கிறான். அமெரிக்காவில் ராஜீய தூதர்கள் வெள்ளை மாளிகையில் பேசிக்கொண்டு இருக்க இருக்க, துரோக மனப்பான்மையோடு சண்டை ஆரம்பித்தவன் திடும் பிரவேசமாக ஏக காலத்தில் பல இடங்களில் குண்டுவீசினான். கிழக்கு இந்திய தீவுகளைக் கைப்பற்றினான். நமது நாட்டிலிருந்து அதுவும் முக்கியமாக தமிழ் ஜில்லாக்களிலிருந்து நம்மவர்கள் குடியேறி வசித்து வந்த சிங்கப்பூர், மலேயா, பர்மா, சையாம் இவைகளைப் பிடித்தான். தற்போது மணிப்பூர் பிரதேசத்தில் போர் நடந்து வருகிறது. மேற்கே இருக்கும் ஹிட்லருக்குத் தம்பியாக சண்டையில் இறங்கியபோதிலும் கொடுஞ் செயல்களில் அவனுக்கு அண்ணனாகவே வஞ்சக ஜப்பானியன் நடந்து வருகிறான்.

லாபம்

இவ்வளவு வகையிலும் நஷ்டமேற்பட்டுக்கொண்டிருந்தாலும், நேர்முகமாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவேனும், சிறிது லாபமிருக்கிறது. சண்டைக்காக சேர்க்கப்பட்ட சிப்பாய்கள், ஆகாய விமானப்படையினர், கப்பல் படையினர் இவர்களின் தொகை பல லட்சக்கணக்காகிறது. நாளுக்கு நாள் அதிகமாயும் வருகிறது. ஒவ்வொரு துறையிலும் நிபுணர்களாக இவர்கள் வெற்றியோடு வீடு திரும்புங்கால் நமது நாட்டின் பிற்காலப் பாதுகாப்பு வீரப்படையினர்களாவார்கள். உள்ள நெகிழ்ச்சி, ஊக்கம், உற்சாகம் இவைகளோடு அவர்கள் வருவதால் நம் நாட்டிலுள்ள மற்றவர்களுக்கும் இத்தகைய குண அமைப்பு விசேஷங்கள் ஏற்படும். பிற்கால அமைப்புத் திட்டத்திற்கு இன்றியமையாத மெஷின் எஞ்சினீயர்கள், கட்டிடங்கள், பாலங்கள் அமைக்கும் எஞ்சினியர்கள், உருக்கு, எஃகு வேலையில் திறமை வாய்ந்த தொழிற்சாலைகளின் நிர்வாகிகள், மோட்டார், லாரி, ரயில், இஞ்சின், இவைகளைச் செய்யும் அறிவு, ஆற்றல் உடையவர்கள், பல்லாயிரக்கணக்கான இதர மெஷின் தொழில்களைச் செய்யும் டெக்னிகல் வேலைக்காரர்கள் முதலியவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டு வருகிறது. விவசாய இந்தியா வெகு சீக்கிரம் மெஷின் தொழிற்சாலைகள் விண்மீன்களைப்போல் பரவியிருக்கும் இந்தியாவாகுமென்பதில் ஐயமில்லை. சர்க்காரும் இப்பொழுது இருந்தே சண்டைக்குப் பின்னிட்ட சீர்திருத்த அமைப்புத் திட்டங்களுக்குத் (Post war Re-construction) தனித்தனியே இலாக்காகளை ஏற்படுத்தி நிபுணர்களை நியமித்து வருவது மிகவும் பாராட்டத் தக்கது.

பொது மக்கள் கடமை

இத்தகைய நிலைமையில் போர்க்கோலம் பூணாத நம் நாட்டு மக்கள், சிவிலியன்ஸ், செய்யவேண்டிய கடமைகளென்ன என்பதை சிறிது ஆராய்வோம். இந்த யுத்தத்தினால் சமாதான நாட்களைப் போல் எல்லா சாமான்களும், முக்கியமாக உணவுப்பொருள்கள், கிடைக்காது. போக்குவரத்து சாதனங்கள் குன்றியதே இதற்குக் காரணமாகும், உற்பத்தியில் குறைவு ஒன்றுமில்லை. பின்னும் பார்க்கப்போனால் உணவுப்பொருட்களை அதிகமாகப் பயிர் செய்ய வேண்டுமென்ற (Grow More Food) பிரசாரத்தினால் முன்னிருந்ததைவிட அதிகமாகவே உற்பத்தியாகின்றன. ஆகையால் உணவுப் பொருள்கள் வகையில் சிக்கனமாக இருக்க சர்க்கார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆடம்பரமான விழாக்கள், விருந்துகள் முதலியவைகளை அறவே நிறுத்த வேண்டும்.

பணப்பழக்கம் எதிர்பார்த்த அளவிற்கு அதிகமாக இருக்கிறது. இத்தருணத்தில் தான் நிதானமாக இருந்து பொருளை சேமித்து வைக்க வேண்டும். இன்றையத்தினம் 100 ரூபாய் கொடுத்து ஒரு சாமானை வாங்கினால் சண்டை நின்ற பிறகு அதே 100 ரூபாய்க்கு பத்து சாமான்கள் வாங்கலாம். அத்தியாவசியமில்லாத பொருள்களை வாங்கக்கூடாது. பெட்டியிலும் பணத்தை சும்மா வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அத்தகைய பணத்திற்கு வட்டியும் கொடுப்பதாக சர்க்கார் ஏற்றுக் கொள்வதால், இந்தச் சமயத்தை விட்டுவிடக்கூடாது. தபாலாபீசில் வாங்கக்கூடிய ரூபாய் 5,000 உச்ச அளவு நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் அல்லது விக்டரி பாண்டுகளை வாங்கி வைப்பது முறையாகும். பிற்கால சேமிப்புக்குள்ள பல வகைகளிலும் இதுவே தலை சிறந்ததாகும்.

நமது சகோதர சகோதரிகளில் பல திறப்பட்ட படிப்பாளிகளுக்கு அவரவர்களுக்கு தகுந்த இலாகாக்களில் நல்ல ஊதியமுள்ள வேலைகள் கிடைக்கின்றன. இத்தருணத்தைக் கை நழுவ விடக்கூடாது. காலேஜ்களில் சேர்ந்து சரித்திரம் (History) தர்க்க சாஸ்திரம் (Logic) முதலிய பாடங்களை படிப்பதைவிட சடத்துவ சாஸ்திரம் (Physics) ரசாயன சாஸ்திரம் (Chemistry) முதலிய பாடங்களை இஷ்ட பாடமாக எடுத்து அதன் நன்மையைக் கொண்டு இஞ்சினியரிங், மெடிகல், இண்டஸ்டிரியல்,

டெக்னிகல், முதலிய இலாகாக்களில் பயிற்சி பெறுவது காலவும் சிறந்ததாகும். பிற்காலத்தில் நாட்டிற்கு நன்மையும் அளிக்கும். உடல் கட்டுடன் உள்ளவர்கள் பட்டாளத்தில் சேரலாம். யுத்த சம்பந்தமாக எந்தவிதமான வேலையில் இருந்தாலும், அன்னவர்களேயும், அன்னவரது குடும்பத்தாரையும் சர்க்கார் பொன்னே போல் போற்றி வருகிறுர்கள். உணவுப் பொருள்கள் வழங்கல், பிள்ளேகள் படிப்பிற்கு வேண்டிய எல்லா செளகரியங்கள், பூமி தர்க்காஸ்து கொடுத்தல், கோர்ட்டில் வழக்கு ஏற்பட்டால் இலவச வக்கீல் உதவி, வகையரா மூலியமாக அனேகம் சலுகைகளே காட்டி வருகிறுர்கள்.

பொருள் செலவு

யுத்தத்திற்காக நேச நாடுகள் பிரதி தினமும் பலகோடிக்கணக்கான பொருளேச் செலவு செய்கிறுர்கள். நேயர்களே சற்று கவனியுங்கள். நாள் ஒன்றுக்கு பலகோடி செலவாகிகிறது. இந்தியாவைப் பொருத்தவரையிலும் யுத்தத்திற்காக, அதுவும் நாடு பாதுகாப்பிற்காக 1939–40 முதல் 1943–44 வரை செலவானது 715 கோடி ரூபாய்தான். உண்மை இங்ஙனமிருக்க் சிலர் தப்பு அர்த்தம் செய்து மக்கள் மனப்பான்மையைக் கெடுக்க ஏழை இந்தியாவில் பணத்தை சர்க்கார் சூரையாடுகிறுர்கள் என்று கூறுவதற்கு ஆதாரமே இல்லே. ஆகையால் நாட்டின் நன்மையைக்கருதி எல்லோரும் தாராளமாகப் பொருளுதவி செய்யக் கடமைபட்டிருக்கிறுர்கள்.

நிற்க, பொதுமக்கள் செய்யவேண்டிய மற்ருெரு முக்கிய கடனும் இருக்கிறது. தேசீயப் போர் முனேயின் உறுதிமொழியிலே அது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதாவது பயங்கரத்தையும் பீதியையும் உண்டாக்கும் பொய் வதந்திகளேப் பரப்பாமலுலிருத்தலும், பிறர் பரப்பும் ஐந்தாம் படைப்பிரசாரத்தைத் தடுத்தலும், தோல்வி மனப்பான்மையை ஒழித்தலும், இறுதி வெற்றி நமதே என்ற திட மனப்பான்மையையும் கொள்வதேயாகும். மேற்கிலிருந்து நாஜிகளும், கிழக்கிலிருந்து கொடிய ஜப்பானியரும் ரேடியோ மூலமாக கணக்கற்ற பச்சைப் புளுகுகளே சொல்லுகிருர்கள். இதை ஆதாரமாக வைத்து ஒன்றுக்குப் பத்தாக சிலர் பொய் வதந்திகளே பரப்புகிறுர்கள். நல்லதிர்ஷ்டமாக முன் வைசிராயாக இருந்த லின்லித் கோ பிரபு, தேசியப் போர் முனேயை அகில இந்தியா ஸ்தாபனமாக ஏற்படுத்திய பின் இந்த தொந்தரவு நாளடைவில் சற்று குறைந்து வருகிறது.

செஞ்சிலுவைச் சேவை

மற்ருெரு முக்கிய விஷயம். எம்மதஸ்தினராகயிருப்பினும், எவ்வித அரசியல் கொள்கையுடையவராயிலும் சரி, யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கும், ஆஸ்பத்திரியிலிருப்பவர்களுக்கும் எதிரிகளிடம் கைதிகளாக அகப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய மறுக்க மாட்டார்கள் என்பது திண்ணம். செஞ்சிலுவை, செயின்ட் ஜான் யுத்த காலக்கூட்டு சங்கத்தின் சார்பாக மேன்மை தங்கிய சென்னே கவர்னர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி மாகாண மக்கள் ஏப்ரல் 1 முதல் 16 தேதிவரையில் வேண்டிய உதவி செய்திருக்கிறுர்கள். இன்னும் பெருவாரியாக எவ்வளவு கொடுத்தாலும் தகும். கொடுக்க வேண்டியதும் நமது கடமைகளில் ஒன்ருகும்.

யுத்த கால நெருக்கடியை உத்தேசித்து பந்தோபஸ்து நிமித்தமும், தற்பாதுகாப்பு நிமித்தமும் அடிக்கடி இந்திய பாதுபாப்புச் சட்டத்தின் கீழ் அனேக உத்திரவுகளே பிறப்பித்து வருகிருர்கள். சாமான்களே ஸ்டாக் செய்வதைத் தடுக்கவும், கொள்ளே லாபம் அடிப்பதை நிறுத்தவும், உணவுப் பொருள்களே பங்கீடு முறையில் வழங்கவும் ஏற்பாடு செய்து வருகிறுர்கள். சற்று கஷ்டங்கள் இருந்தாலும் தியாக சிந்தனேயோடு சகித்துக் கொண்டு வாழ்நாட்களேக் கொண்டு செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சர்ச்சில் ஊக்கம்

நான்கு பெரிய வல்லரசுகளும், இதர சிறிய தேசங்களும் ஒன்றுகூடி நேச நாடுகள் என்ற பெயருடன் யுத்தத்தை நடத்தி வருகிருர்கள். வயது 60 ஆகியும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் இன்னும் 30 வயதுள்ள இளமைப் பிராயத்தவர்போல குன்ருத ஊக்கத்துடன் வீரவழிக்கே ஊக்கி வருகிருர். மகத்தான வெற்றி கிடைக்கினும் இன்னும் செல்லாக வேண்டிய பாதை கடுமையாக இருக்கிறதென்றும், முஸ்தீப்பில் தளரவிடக் கூடாதென்றும் மீண்டும் அறிவுறுத்தி வருகிருர்.

நெஞ்சு உரமும், உடல் உரமும் ஒருங்கே கூடிய வைரம் பாய்ந்த மார்ஷல் ஸ்டாலின் விடாதே, பிடி, உதை, உந்து என்று போர் நடத்தி வருகிருர்.

ஜனதிபதி ரூஸ்வெல்ட் குத்தகையும் இரவலும் என்ற குறிக்கோள்கொண்டு கோடிக்கணக்கான டாலர்களேச் செலவழித்தும், இன்னும் செலவழிக்கத் தயாராக இருந்து கொண்டும் அஞ்சாது அமுல் நடத்துகிருர்.

எவவித இன்னல் வந்தாலும் கிஞ்சித்தும் விட்டுக் கொடுப்ப தில்லே யென்றே உறுதியோடு வீர மார்ஷல் ஷியாங்கே ஷேக் தன் சைனியங்களே பல வருஷங்களாகக் கொண்டு செலுத்தி வருகிருர். இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ் வீரர்கள் பலபோர் முகங்களிலும், இரவும் பகலும் தரையிலும், தண்ணீரிலும், ஆகாயத்திலும் வலுவாக சண்டை செய்து குருதி வெள்ளம் கொண்டு நீர்மூழ்கிகளே மூழ்க வைத்து, மார்டமாளிகைகளேத் தரைமட்டமாக்கி வருகிருர்கள். இவர்களுடைய தீவிர முயற்சி நல்ல பயன்களேக் கொடுக்கு மென்பது உறுதி.

நேசதேச வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் நமது நன்றி உரித்தாகுக. இறுதி வெற்றி காணும் வரை பல துறைகளிலும் நமது கடமைகளேச் செவ்வனே செய்து முடிப்போமாக. இறைவன் அருள் சுரக்க.

—திருச்சிவானெலி நிலேயத்திலிருந்து ஏப்ரல்மீ" 18வ ஒலி பரப்பிய பிரசங்கம்.

இம்பால் பகுதி போர் முனே காட்சிகள்



17-வது படையைச் சேர்ந்த 'சமிக்ஞை' கோஷ்டியினர் இம்பால் பகுதியில் கண் காணிப்புச் செய்கின்றனர்.



இம்பால் சமவெளியில் ஒரு டாங்கி போகும் காட்சி.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

மே 2.—ஏகாதிபத்ய பிரதம மந்திரிகள் இன்றைய கூட்டத்தில் ஐரோப்பிய தாக்குதல், ஜப்பானை முறியடித்தல் சம்பந்தமான திட்டங்களைப் பற்றிப் பேசினர்.

லுட்விக்ஷாபனை நேச வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

மே 3.—ஏகாதிபத்திய பிரதம மந்திரிகள் மகா நாடு இன்று யுத்த ஏற்பாடுகள் விவாதத்தை முடித்தது.

பிரிட்டிஷ் விமானங்கள் லீவர்க்குசனைத் தாக்கின.

மே 4.—ஜெர்மனி சரணாகதியடைந்தால் அதன் மீது ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளைப்பற்றி ஏகாதிபத்ய பிரதம மந்திரிகள் ஆலோசித்தனர்.

மே 5.—இன்றும் ஏகாதிபத்திய பிரதம மந்திரிகள் கூட்டம் நடந்தது.

ஆகாய விமான படையின் ரகசிய தலைமைக் காரியாலயத்தை மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் இன்று பார்வையிட்டார்.

மே 7.—பெர்லின் கடுமையாக தாக்கப்பட்டது.

மே 8.—பெர்லினும், ப்ரன்ஸ்விக்கும் நேச விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டன.

நேற்றிரவு சில ஜெர்மன் விமானங்கள் தென் இங்கிலாந்தில் சில இடங்களில் குண்டுகள் வீசின.

ஏகாதிபத்ய பிரதம மந்திரிகள் இன்றைய கூட்டத்தில் யுத்தத்திற்குப் பின் ஆக வேண்டிய புனருத்தாரண திட்டங்களைப் பற்றி ஆலோசித்தனர்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

மே 5.—பிரிட்டனுக்கு, அமெரிக்க-பிரிட்டன் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி விவாதிக்கச் சென்றிருந்த ஐக்கிய அமெரிக்க உபகாரியதரிசி மிஸ்டர் ஆர். ஸ்டெட்டினியஸ் இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

மே.—ரஷ்யாவில், அமெரிக்க ஸ்தானீகராயிருக்கும் மிஸ்டர் ஆவரெல் ஹார்ரிமன் இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

மே 7.—ஒரு மாத ஓய்வுக்குப்பின் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வாஷிங்டனுக்கு வந்தார்.

இந்தியா, பர்மா, ஸிலோன்.

மே 2.—சமீபத்தில் ரோந்து சென்ற பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல் வங்காளக் குடாக் கடலில் ஒரு ஜப்பானிய நாசகாரியை மூழ்கடித்தது.

மே 3.—கொஹிமாவுக்கு வடபக்கம் நேசத் துருப்புகள் எதிரியின் ஸ்தானங்களைப் பிடித்தன. சீனத் துருப்புகள் பர்மாவில் இங்காங்காடாங்கைப் பிடித்தனர்.

மே 4.—கொஹிமாவுக்கு வடக்கிலும், தெற்கிலும், ரோந்து நடவடிக்கைகள் இருந்தன. இம்பால் சமவெளியில் முக்கியமான மாறுதல் ஒன்றுமில்லை.

மே 5—கொஹிமாப் பகுதியில் எதிரியின் ஸ்தானங்களை நேசப் படைகள் பலமாகத் தாக்கி முன்னேறுகின்றன.

மே 6.—கொஹிமாவில் பல முக்கிய ஸ்தானங்களிலிருந்து எதிரிகளை நேசப் படையினர் வெளியேற்றினர்.

மே 7.—நேசப் படைகள் புதிடாங்கிலிருந்து வாபஸாயின. சமீபத்தில் கொஹிமாப் பிரதேசத்தில் எதிரிகளிடமிருந்து பிடித்த ஸ்தானங்களை நேசப் படையினர் ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மே 8.—மணிப்பூர் முனை பூராவும் ஜப்பானியர் முனைந்து தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். பலேலுக்கு வட கிழக்கில் நேசப் படைகள் இரு கிராமங்களைக் கைப்பற்றின.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

மே 2.—சோவியத் விமானப்படை லவாவை கடுமையாகத் தாக்கிற்று.

மே 6.—ஸெபாஸ்டபூலை ரஷ்யர் மீண்டும் தாக்க ஆரம்பித்து விட்டனர்.

மே 7.—சோவியத் படை ஸெபாஸ்ட்பூலைச் சூழ்ந்து கொண்டது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

மே 2.—பிரிட்டிஷ் விமானங்கள் பிரான்ஸிலுள்ள டூலூஸ், லையோன்ஸ், பாரிஸ் முதலிய இடங்கள் மீது குண்டுகளை வீசின.

மே 4.—பிரான்ஸில் ரெய்ம்ஸ், நாய்ல்லி முதலிய இடங்களையும், புகாரெஸ்டையும் நேச விமானங்கள் தாக்கின.

நடு நிலைமை நாடுகள்.

மே 2.—ஸ்பெயின், பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா இவற்றுக்குள் ஏற்பட்டுள்ள ஒரு ஒப்பந்தத்தின் விவரம் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் ஸ்பெயின் ஜெர்மனிக்கு அனுப்பும் உல்பிராமைக் குறைத்துவிடும். டான்ஜியர், ஸ்பானிய முராக்கோ, ஸ்பெயின் இவற்றினின்று அச்சுநாட்டுப் பிரதிநிதிகளை அகற்றிவிடும்.

மே 4.—துருக்கி அந்நியநாட்டு மந்திரி, துருக்கி எதற்கும் தயாராய் இருக்க வேண்டும் என்று கூறினர்.

தூரக் கீழ்திசை நாடுகள்.

மே 2.—அமெரிக்க விமானங்கள் ட்ருக் பிரதேசத்தைத் தாக்கின.

மே 3.—சைனாவுக்கு பிரிட்டன் கடன் கொடுக்க புது ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடப்பட்டது.

மே 5.—இந்தோ-சீனாவில் முக்கிய நகரமான சைகோனை அமெரிக்க விமானங்கள் தாக்கின.

மே 8.—ஸெலிபீஸ் தீவுகளுக்குப் பக்கத்தில் சென்று கொண்டிருந்த ஜப்பானிய கான்வாயைச் சேர்ந்த எட்டு கப்பல்களை நேச விமானங்கள் தாக்கின.

கேஸினோவில் மானஸ்டரி குன்று மீது 'சப்ளைகளை' ஏற்றிக்கொண்டு போகும் காட்சி.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.